

# குழந்தைகள் பேச்சு சிகிச்சை

## Early Intervention Manual for Speech Therapy

Prepared by

Tracey Norman-Rice M.Sc., SLP
Jessica Tomarchio, M.Sc., SLP
Sydney Acker, M.Sc., SLP
S.AliFathima , Speech Therapist

Enabling Inclusion through
Early Intervention (EI) Programme

# அமர் சேவா சங்கம் (ASSA)

அமர் சேவா சங்கம் கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு ஊனமுற்றோர்களின் வளர்ச்சிக்காக பணியாற்றும் ஒரு முக்கிய நிறுவனமாகும். இது தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆய்க்குடி கிராமத்தில் அமைந்துள்ளது.

**அமர் சேவா சங்கத்தின் குறிக்கோள்**

சவால் விடப்பட்டோர்களுக்கு மறுவாழ்வு மற்றும் முன்னேற்ற மையங்களை நிறுவி அதன் முலம் கிராமங்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தி இவைகளை ஒரு  முன்மாதிரி மையங்களாக உருவாக்கி சவால் விடப்பட்டோர்களை சுய உதவி குழுக்களாக ஒருங்கினைத்து சமுதாயத்தில்  இவர்களையும் கூடி வாழச்செய்வதே அமர் சேவா சங்கத்தின் குறிக்கோளாகும்

**அவர் சேவா சங்கத்தின் அணுகுமுறை**

உடலாலும் மனதாலும் மாற்றுத்திறன் படைத்தவர்களின் வாழ்க்கைத்திறனை மேம்படுத்துவதற்காக அனைத்து வசதிகளையும் கொண்ட வள மையத்தை உருவாக்கி செயலாக்கம் செய்ய வேண்டும். மேலும் இந்த செயல்பாட்டில் கிராம சமுதாயத்தை ஈடுபடுத்தி  சவால் விடப்பட்டவர்கள் இந்த சமுதாயத்தில் சம வாய்ப்பு, சமஉரிமை, மற்றும் சம அந்தஸ்துடன் வாழ  வழிவகை செய்யும் ஊடகமாக செயல்பட வேண்டும்

கிராமபுறங்களை மையமாகக் கொண்டு ஊனமுற்றோர்களின் மேம்பாட்டிற்காக திரு. ராமகிருஷ்ணன் என்பவரால் ஊனமுற்றோர்கான சர்வதேச ஆண்டில் அமர் சேவா சங்கம் நிறுவப்பட்டது.

## பத்மஸ்ரீ S. ராமகிருஷ்ணன், நிறுவனர் தலைவர்



திரு.S.ராமகிருஷ்ணன் தனது நான்காவது ஆண்டு பொறியியல் கல்லூரியில் படிக்கும் போது கடற்படை அதிகாரிகள் தேர்வு சோதனையின் கடைசி சுற்றில் கலந்து கொள்ளும் போது அவரது முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு இரண்டு கைகள் மற்றும் கால்கள் செயலிழக்கப்பட்டார். இவர் ஊனமுற்றோருக்கான சர்வதேச ஆண்டில் தனக்கு சிகிச்சை அளித்து ஊக்கப்படுத்திய மருத்துவர் ஏர் மார்ஷல் டாக்டர். அமர்ஜித்சிங் சாகல் அவர்களின் பெயரில் இந்த அமர் சேவா சங்கத்தை 1981-ஆம் ஆண்டு நிறுவினார். எஸ்.ராமகிருஷ்ணன் அமர் சேவா சங்கத்தின் தலைவராகக் செயல்பட்டு வருகிறார்.



## S. சங்கரராமன், செயலாளர்

.S.சங்கரராமன் ஒரு பட்டய கணக்காளர்(ஆடிட்டர்). இவர் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு சக்கரநாற்காலி உதவியுடன் வாழ்ந்து வருகிறார். இவர் தன்னை 1992-ல் அமர் சேவா சங்கத்தின் சேவையுடன் இணைத்துக்கொண்டார். இவர் அமர் சேவா சங்கத்தின் செயலாளராக பணியாற்றி வருகிறார். இவர் அமர் சேவா சங்கத் தலைவர் எஸ் ராமகிருஷ்ணன் அவருடன் இணைந்து ஆய்க்குடியில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் வள மையத்தை ஏற்படுத்தி மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான பல்வேறு சேவைகளை செய்து வருகிறார்

## வளர்ச்சி தாமதம் என்றால் என்ன?

முதல் அடி எடுத்து வைத்தல், முதல்முறையாக சிரித்தல், "பை பை" என்று கை அசைத்தல் போன்ற திறன்கள் "வளர்ச்சி மைல்கற்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

குழந்தைகள் எவ்வாறு விளையாடுகிறார்கள், கற்றுக் கொள்கிறார்கள், பேசுகிறார்கள், நடந்து கொள்கிறார்கள், நகர்கிறார்கள் (எடுத்துக்காட்டாக ஊர்ந்து செல்வது மற்றும் நடப்பது) என்பதில் பல்வேறு வளர்ச்சி நிலை படிநிலைகளை அடைகிறார்கள். குழந்தைகள் தாமாக தங்கள் போக்கில் வளருகிறார்கள். எனினும் சில குறிப்பிட்ட வயதிற்கு தகுந்த வளர்ச்சி படி நிலையை அடைய முடியவில்லை எனில் இது வளர்ச்சி தாமதம் என்று அழைக்கப்படுகிறது. ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பது, குழந்தை அந்தந்த வயதிற்கேற்ப வளர்ச்சிநிலையை அடைய உதவும்.

### வளர்ச்சி குறைபாடுகள் என்றால் என்ன?

வளர்ச்சி குறைபாடுகள் என்பது உடல் இயக்கம் கற்றல், மொழி, சமூக அல்லது நடத்தை சார்ந்த பகுதிகளில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாக குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகும். இவை குழந்தைகளின் வளர்ச்சி காலத்தில் தொடங்குகின்றன. இது அன்றாடம் செய்யக்கூடிய செயல்பாடுகளை பாதிக்கலாம் மற்றும் இந்த பாதிப்பு ஒரு நபரின் வாழ்நாள் முழுவதும் நீடிக்கலாம். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, வளர்ச்சி தாமதங்களைக் கொண்ட குழந்தைகளுக்கு பொருத்தமான ஆரம்பகால சிகிச்சை முறைகள் அளிக்கப்படாவிட்டால் அதன் விளைவாக இந்த குழந்தைகள் வாழ்நாள் முழுவதும் சிரமத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். மேலும் அதிக வறுமை மற்றும் அதிகளவு சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் நிலை உருவாகலாம்.

### ஆரம்ப கால சிகிச்சைமுறை என்றால் என்ன?

குழந்தையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் சிகிச்சை முறைகள் உடல்ரீதியான சமூக, உணர்ச்சி, மொழி மற்றும் அறிவுதிறன் போன்ற வளர்ச்சி பகுதிகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த வளர்ச்சிப் பாதைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பயிற்சிகளே ஆரம்பகால சிகிச்சை முறை என்று அழைக்கப்படுகிறது. இது இயன்முறை சிகிச்சை, தொழில்முறை சிகிச்சை, பேச்சுமொழி சிகிச்சை மற்றும் சிறப்புகல்வி ஆகியவற்றை உள்ளடக்கியது. ஆரம்பகால சிகிச்சைமுறை உடல், அறிவாற்றல், உணர்ச்சி, நடத்தை, சமூக மற்றும் தகவல் தொடர்பு போன்ற பகுதிகளில் வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகளுக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது. தரமான ஆரம்பகால சிகிச்சைமுறைகளால் குழந்தைகள் தங்களுக்கு சாத்தியமான முழு திறனையும் அடையமுடியும். மேலும் அவர்கள் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை இந்த சமூகத்துடன் ஒருங்கிணைந்தும் வாழ முடியும்.



### Enable Inclusion ஒருங்கிணைத்தல்

அமர் சேவா சங்கத்தின் "எனேபிளிங் இன்குளுசன் திட்டமானது" பல விருதுகளை வென்ற "எனேபிளிங் இ.செயலி" மூலம் கிராம மறுவாழ்வு பணியாளர்களை மறுவாழ்வு சிறப்பு நிபுணர்களோடு (பிஸியோதெரபிஸ்ட்கள், ஆக்குபேஷனல் தெரபிஸ்ட்கள், சிறப்பு ஆசிரியர்கள், பேச்சு பயிற்சியாளர் மற்றும் பேச்சு பயிற்சி உதவியாளர்) இணைத்து கிராம மறுவாழ்வு பணியாளர்களின் மூலமாக குழந்தைகளின் வீடுகளில் அல்லது சமுதாய மையங்களில் ஆரம்பகால சிகிச்சையை அளிக்கிறது. இந்த திட்டத்தின் மூலமாக வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு அதிக பலன் கிடைத்துள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் அதிகமான குழந்தைகள் தங்கள் முன்னேற்றம் வளர்ச்சிபடி நிலைகளை அடைந்துள்ளார்கள்.

# குழந்தைகளின் தகவல் பரிமாற்றம், பேச்சு மொழி கோளாறுகள், அவற்றின் மதிப்பீடு மற்றும் சிகிச்சை நுட்பங்களைப் புரிந்துகொள்வதற்கான ஒரு அறிமுகம்


| | |
|---|---|
| முன்னுரை | 5 |
| தகவல் பரிமாற்றம் (COMMUNICATION) | 5 |
| பேச்சு என்றால் என்ன? | 6 |
| மொழி என்றால் என்ன? | 9 |
| மொழி புரிதல் என்றால் என்ன? | 9 |
| மதிப்பீடு (Assessment): | 13 |
| பயிற்சி: | 14 |
| பேச்சு மற்றும் மொழி மேம்பாட்டுக்கான உதவிக்குறிப்புகள் | 15 |
| கற்றலை ஆதரிப்பதற்கான உதவிக்குறிப்புகள் | 17 |
| பார்வை தொடர்பு சாதனங்கள் | 21 |
| செவித்திறன் குறைபாடு : | 22 |
| செயல்பாட்டு தொடர்பு: | 23 |
| உமிழ்நீர் கட்டுப்பாட்டு பயிற்சிகள்: (Drooling Control Exercises) | 24 |
| உச்சரிப்பு பயிற்சி:( Articulation Training:) | 25 |
| சுருக்கம் | 26 |


## 1. முன்னுரை

பேச்சு மற்றும் மொழி சிரமங்களைக் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் பேச்சு பயிற்சியாளர்கள், சிறப்பு கல்வியாளர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கானது இந்த புத்தகம். தகவல் தொடர்பு, பேச்சு, வெளிப்படுத்தும் மொழி மற்றும் மொழி புரிதல் பற்றிய அடிப்படை புரிதலை வழங்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. வீட்டிலும்,பள்ளியிலும்,சமூகத்திலும் தினமும் பயன்படுத்தக்கூடிய குறிப்பிட்ட உதவிக்குறிப்புகள் மற்றும் உத்திகளை இந்த புத்தகம் வழங்குகிறது.

## 2. தகவல் பரிமாற்றம் (COMMUNICATION)

தகவல் பரிமாற்றம் என்பது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தகவல்களை அனுப்புவது மற்றும் பரிமாற்றம் கொள்வதும் வாய்மொழி (சொற்கள், ஒலிகள் / குரல்கள்), சொற்களற்ற (சைகைகள், எழுதுதல், படங்கள்) அல்லது இரண்டின் கலவையாக இருக்கலாம் (எ.கா. ஹலோ சொல்லும் போது அசைத்தல்). குழந்தைகள் பல்வேறு வழிகளில் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக அவர்களின் திறன்களைப் பொறுத்து தொடர்பு கொள்கிறார்கள். புதிதாகப் பிறந்த குழந்தைகள் அழுகையின் மூலம் தொடர்புகொள்கிறார்கள், பின்னர் ஒரு செய்தியை வெளிப்படுத்த குரலை பயன்படுத்தத்தொடங்குவார்கள்..

**(கொஞ்சல் மொழி, மழலை பேச்சு மற்றும் சிரித்தல்.)**



| வயது வரம்பு | குழந்தைகள் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் |
|---|---|
| புதிதாகப் பிறந்த குழந்தைகள் | பல்வேறு வகையான அழுகை |
| வயது 1-3 | சைகைகள், ஒலிகள், முகபாவங்கள் மற்றும் உடல் அசைவுகள்.<br>படிப்படியாக 2 -3 சொல் சேர்க்கைகள். |

# 3 . பேச்சு என்றால் என்ன?

பேச்சு என்பது வெவ்வேறு ஒலிகளை சொற்களாக இணைக்கும் செயல்.

1) குழந்தைகள் குரல் கொடுக்கத் தொடங்குகிறார்கள் (எ.கா. அழுவதும் சிரிப்பதும்)

2)பின்னர் மெதுவாக குறிப்பிட்ட ஒலிகளை உருவாக்கத் தொடங்குகிறார்கள் (எ.கா. பாபாபா).

3) பின்னர் ஒலிகளை இணைத்து சொற்களை உருவாக்குகிறார்கள்(எ.கா. அம்மா, மாமா, தாத்தா).

## பேச்சு எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

பேச்சு நுரையீரலில் இருந்து, குரல் நாண்கள் வழியாக, மற்றும் வாயிலிருந்து வெளியேறும் காற்று மூலமாகவும் உருவாக்கப்படுகிறது. முகம், நாக்கு, உதடுகள் மற்றும் தாடையின் தசைகள் காற்றை வெவ்வேறு ஒலிகளாக வடிவமைக்க உதவுகின்றன.

## பேச்சு எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

பேச்சு நுரையீரலில் இருந்து, குரல் நாண்கள் வழியாக, மற்றும் வாயிலிருந்து வெளியேறும் காற்று மூலமாகவும் உருவாக்கப்படுகிறது.

முகம், நாக்கு, உதடுகள் மற்றும் தாடையின் தசைகள் காற்றை வெவ்வேறு ஒலிகளாக வடிவமைக்க உதவுகின்றன.




Image source: world-voice-day.org

## சுவாசம் - பேச்சுக்கான "ஆற்றல்".

சுவாசம் பேச்சுக்கு சக்தியை வழங்குகிறது

காற்று நுரையீரலில் இருந்து வந்து குரல் நாண்கள் வழியாக வாயிலிருந்து வெளியே தள்ளப்படுகிறது .பேச்சை ஆதரிக்க குழந்தைக்கு சுவாசத்திற்கு போதுமான தசைக் கட்டுப்பாடு இருக்க வேண்டும் .

குரல் - பேச்சுக்கான "ஒலி"

குரல் நாண்கள் கழுத்தில் இரண்டு மிகச் சிறிய தசைகள். குரல்வளைகளுக்கு இடையில் காற்று செல்லும் போது அவை அதிர்வுறும்.

உச்சரிப்பு - குறிப்பிட்ட பேச்சு ஒலிகளின் "உற்பத்தி"

காற்று வாயில் நுழைந்தவுடன் வெவ்வேறு தசைகளைப் பயன்படுத்தி ஒலி வடிவமைக்கப்படுகிறது.

ஒலிகளை வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் வாயின் தசைகள் பின்வருமாறு

தாடை: திறந்து மூடுகிறது

எ.கா. "ஆ"- "ஆட்டோ" (திறந்த தாடை) மற்றும் "இ"- "இலை" (மூடிய தாடை).

நாக்கு: மேலும் கீழும், இட வல பக்கமாகவும், பின்னிருந்து

எகா "ல" லட்டு" க" கேணி.

உதடுகள்: வட்டமாக அல்லது சாதாரணமாக இருக்கலாம்

எ.கா. "ஓ "ஓடு " (உதடுகள் வட்டமாக இருக்கும் ) எதிராக" ஈ" (உதடுகள் சாதாரணமாக இருக்கும்).

அண்ணம்: காற்று வாயில் தங்குவதற்கு அல்லது மூக்கிலிருந்து வெளியேற உதவுவதற்கு மேல் மற்றும் கீழ் நோக்கி நகரலாம்

எ.கா. "ஸ்" சர்ப்பம் முயற்சிக்கவும் (காற்று வாய் வழியாக பயணிக்கிறது) எதிராக "ம்" அம்மா முயற்சிக்கவும் (காற்று மூக்கு வழியாக பயணிக்கிறது).


மூளை - "கட்டுப்பாட்டு மையம்".

சுவாசம், குரல் கொடுப்பது மற்றும் உச்சரிப்பதற்குத் தேவையான தசைகள் அனைத்தும் மூளையால் கட்டுப்படுத்தப்படுகின்றன .மூளை உடலில் உள்ள ஒவ்வொரு தசைகளுக்கும் செய்திகளை அனுப்புகிறது . மூளை சரியாக வளர்ச்சி அடைய வில்லை என்றால், உடலின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு செய்திகளை அனுப்புவதில் சிரமம் இருக்கும் . இதனால் பேச்சாற்றல் மற்ற குழந்தைகளை விட மெதுவாக வளரக்கூடும் அல்லது குறைபாடு ஏற்படும்.

## ஒலிகள் எவ்வாறு உருவாகின்றன?

வெவ்வேறு வயதில் ஒரு குறிப்பிட்ட வரிசையில் பேச்சு ஒலிகள் உருவாகின்றன, எனவே குழந்தையின் மொழியில் ஒலிகளின் வளர்ச்சியைப் புரிந்துகொள்வது அவசியம்.

எ.கா கப்பல் - "க" வை விட அம்மா "ம" எளிதில் உருவாகும்




எ.கா. காருக்கு "தார்" என்று சொல்லலாம், ஆனால் சுமார் 6 வயது வரை "கார்" என்ற வார்த்தையை சரியாகச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

பேச்சு ஒலி உற்பத்திக்கு நாக்கு, உதடு மற்றும் தாடை தசைகளின் வளர்ச்சி தேவைப்படுகிறது. இந்த தசைகள் ஒலிகளை சரியாக உருவாக்க போதுமான வலிமையும் இயக்கமும் இருக்க வேண்டும். ஆங்கில பேச்சு ஒலிகள் உருவாகும் வரிசையை படம் காட்டுகிறது.

## பேச்சு சரியாக உருவாகாத சில அறிகுறிகள் யாவை?

செவித்திறன் இழப்பு அல்லது அடிக்கடி காது நோய்த்தொற்றுகளை அனுபவித்தல்.

மழலை பேச்சு மற்றும் ஒலிகள் உருவாக்குவதில் குறை.

பேச்சு மற்றும் சத்தத்தின் வளர்ச்சி குறைபாடு அல்லது நிறுத்தம்.

ஆட்டிசம் , டௌன்ஸ் சின்ரோம் , மூளை முடக்குவாதத்தொடு பிறப்பது மற்றும் அன்னப்பிளவு குறைபாடு.

**தசைத்தளர்வினால் (weak muscle control) ஏற்படும் குறைபாடுகள்:**

உறிதல் அல்லது விழுங்குதல் .

தாடையைத் திறத்தல், மூடுதல் அல்லது நகர்த்துதல்.

நாக்கை நீட்டுவது அல்லது இட வலமாக மற்றும் மேல் கீழாக சுழற்றுவது.

உதடுகளை அகல திறந்து அல்லது விரிப்பது

நேராக நிமிர்ந்து உட்காருவது.

தலையை நேரான நிலையில் வைத்திருத்தல் .

பேசுவதற்கு போதுமான சுவாசம் இல்லாமை.(reduced breath support)

## மொழி என்றால் என்ன?

சொற்கள் சொற்றொடர்களாகவும் வாக்கியங்களாகவும் இணைக்க குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்றும் செயல்முறையே மொழி, இதனால் செய்தி அர்த்தமுள்ளதாக இருப்பதால் மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படும்.. குழந்தைகள் தங்கள் மொழியின் விதிகளை பெரியவர்கள் பேசுவதை கவனிக்கும் போது தெரிந்து கொள்கிறார்கள்.

மொழி இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது:

- வெளிப்படுத்தும் மொழி (பேசுதல்)
- மொழி புரிதல்.

## மொழி புரிதல் என்றால் என்ன?

மொழி புரிதல் என்பது ஒரு குழந்தையால் புரிந்துகொள்ளக்கூடிய மொழி ஆகும்.. குழந்தையின் திசைகளைப் பின்பற்றும் திறன் (எ.கா. "பந்தை எடுத்து வா"), அவர்களின் பெயருக்கு பதிலளித்தல் மற்றும் அடிப்படைக் கருத்துகளைப் புரிந்துகொள்வது (எ.கா. அளவு, வடிவம்

# மொழி புரிதல் - வளர்ச்சி நிலைகள்:

| வயது வரம்பு | புரிந்துகொள்வது |
|---|---|
| 12மாதங்கள் | ஒருவர் தன் பெயர் சொல்லி அழைக்கும் போது அவர்களை நோக்கி கவனிப்பது.<br>குறைந்தது, ஒரு உடல் உறுப்புஅறிவார் (எ.கா. தலை, மூக்கு, கண்கள், காதுகள் அல்லது வாய்)<br>எளிய சிறு கட்டளைகளை பின்பற்றுகிறது (எ.கா. "இங்கே வா", "தொடாதே")<br>நடைமுறைகள் மற்றும் அவை எதைக் குறிக்கின்றன என்பது தெரியும் . (எ.கா. தூங்கும் நேரம், குளிக்கும் நேரம், உணவு நேரம்)<br>நபர்களையும் பொருட்களையும் அடையாளம் கண்டு, கேட்கும்போது அவற்றை/அவர்களை தேடுகிறது.<br>எ.கா. "அப்பா எங்கே?", "உன் பந்து எங்கே?" |
| 18மாதங்கள் | உள்ளே /வெளியே மற்றும் ஆன் / ஆஃப் ஆகியவற்றின் பொருளைப் புரிந்துகொள்கிறது<br>கேட்கும்போது 2 உடல் பாகங்களை சுட்டிக்காட்டலாம்.<br>சிறு கட்டளைகளை பின்பற்றுகிறது |
| 24மாதங்கள் | இரு சிறு கட்டளைகளை ஒரே நேரத்தில் பின்பற்றுகிறது (எ.கா: "பந்தைப் பெற்று அதைத் தொட்டியில் வைக்கவும்.") |
| 30மாதங்கள் | அளவு (பெரிய / சிறிய) மற்றும் அளவு (கொஞ்சம் / நிறைய) பற்றிய கருத்துகளைப் புரிந்துகொள்கிறது எளிய, சிறுகதைகளைப் புரிந்துகொள்கிறது. |
| 3ஆண்டுகள் | எளிமையான "யார்", "என்ன" மற்றும் "எங்கே" கேள்விகளைப் புரிந்துகொள்கிறது (எ.கா: "உங்கள் காலணி யாரிடம் இருக்கிறது?", "அது என்ன நிறம்?") |
| 4ஆண்டுகள் | மூன்று சிறு கட்டளைகளை ஒரே நேரத்தில் பின்பற்றுகிறது (எ.கா: "ஒரு துண்டு காகிதத்தைப் பெற்று, ஒரு பூனை வரைந்து, ஆசிரியரிடம் கொடுங்கள்.) |

## வெளிப்படுத்தும் மொழி என்றால் என்ன?

வெளிப்படுத்தும் மொழி என்பது ஒரு நபரின் விருப்பங்கள், தேவைகள், உணர்வுகள் மற்றும் யோசனைகளை பேச்சு (குரல், சொற்கள் மற்றும் வாக்கியங்கள்), சைகைகள் (சுட்டிக்காட்டுதல், கை அசைத்தல், அணைத்துக்கொள்வது மற்றும் கையைப் பிடிப்பது), முகபாவங்கள் (புன்னகை, கோபம், விலகிப் பார்ப்பது), எழுதுதல் மற்றும் வரைதல் ஆகியவற்றின் மூலம்

## தொடர்புகொள்வது.



**மொழி புரிதல்**

-நாம் புரிந்துகொள்வது

-பெரும்பாலும் முதலில் உருவாகிறது

பின்வரும்எ.கா. திசைகள்,

- பொருட்களை அடையாளம் காண்பது, வண்ணங்களின் அறிவு, எண்கள் மற்றும் வாசிப்பு



வெளிப்படுத்தும் மொழி

-நாம் என்ன சொல்கிறோம்

-பெரும்பாலும் இரண்டாவது உருவாகிறது

-எ.கா. பேசும் எழுத்து, சொற்கள் மற்றும் இலக்கணம்

| வயது வரம்பு | வெளிப்படுத்துவது |
|---|---|
| 8-12 மாதங்கள் | வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு வெவ்வேறு சத்தங்களை உருவாக்குகிறது .(எ.கா.மகிழ்ச்சி,பசி) சைகைகள் காட்டுவது (கைதட்டல், வெற்றி குறி காட்டுவது,ஹய்-ஃபை போன்றவை சொல்வது ) |
| 12 மாதவயதில் | 3-5சொற்களைப் பயன்படுத்தத் தொடங்குகிறது. |
| 18 மாதங்கள் | கிட்டத்தட்ட 10- 20 சொற்களைப் பயன்படுத்துகிறது |
| 24 மாதங்கள் | 100-150 சொற்களைப் பயன்படுத்துகிறது தேவைகளுக்காகவும் அடையாளம் கண்டு கொள்ளவும் 2-4 சொல் சேர்க்கைகளைப் பயன்படுத்துகிறது .(எ.கா. "அம்மா வா" அல்லது "பால் வேண்டும்"). |
| 30 மாதங்கள் | குறைந்தது 350 சொற்களைப் பயன்படுத்த முடியும் செயல் சொற்களைப் பயன்படுத்துகிறது (எ.கா. ஓடுதல், குதித்தல்,தூங்குதல் ,சாப்பிடுதல், குடித்தல்.) |
| 3 ஆண்டுகள் | எளியவாக்கியங்களை பேசுதல். எகா: ('' பந்து வைத்து விளையாடலாம்') கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளைப் பற்றி பேசுதல் (எ.கா. அன்று ஒரு நாள் நான் பசுவைப் பார்த்தேன்). |
| 4 ஆண்டுகள் | கதைகள் சொல்லத் தொடங்குகிறது. பேச்சு தெளிவாக மற்றும் புரிந்துகொள்ளக்கூடியதாகிறது பழக்கமான பெரியவர்கள் மற்றும் பிற குழந்தைகளுடன் எளிதில் தொடர்பு கொள்கிறது. |

# 5. மதிப்பீடு (Assessment):

மதிப்பீடு என்பது ஒருவரின் நிலைமைகளைக் கண்டறிவதற்கும் பயிற்சி தருவதற்கும்ஆகும், இதன் மூலம் சிகிச்சை / பயிற்சித் திட்டங்களை வகுக்க முடியும்.

ஒவ்வொரு மதிப்பீட்டு நடைமுறையும் இதில் அடங்கும்:

-குழந்தைகளின் தனிப்பட்ட விபரங்கள்
குழந்தைகளின் தனிப்பட்ட விவரங்கள் (பெயர், வயது, இடம் போன்றவை)
- குடும்பம் பற்றி அறிதல்
அறியப்பட்ட குறைபாடுகள் / கோளாறுகள்
வாடிக்கையாளரின் குடும்பத்தின் விவரங்கள் இதில் அடங்கும்.
-மருத்துவ வரலாறு அறிதல்
இது பிறந்தவுடன் குழந்தையின் அழுகை, எடை, நிறம், குழந்தையை இன்குபேட்டர்ல் வைத்திருந்ததற்கான சான்று, எந்த மருத்துவ நிலைமைகள் போன்ற விவரங்களையும் உள்ளடக்கியது.

- கேட்டல் மற்றும் பார்வை திறன்
- தொடர்பு கொள்ளும் முறை
- வாய்வழி கட்டமைப்புகள் குறிப்புகள் மதிப்பீடு
- வெஜிடேடிவ் ஸ்கில்ஸ் மதிப்பீடு (Vegetative skills)
-மொழியியல் திறன்கள்
- புரிதல் மற்றும் வெளிப்பாடு.

## COM- DEALL:

பேச்சு தாமதங்களைக் கொண்ட குழந்தைகளின் முறையான மதிப்பீட்டிற்கு COM DEALL சோதனை பட்டியல் பயன்படுத்தப்படுகிறது.
பேச்சு பயிற்சியாளர்கள் புரிதல் மற்றும் வெளிப்படையான மொழி பகுதியை மதிப்பீடு செய்கிறார்கள் மற்றும் கணக்கீடுகள் செய்யப்படுகின்றன.
தலா ஏழு குழுக்கள் உள்ளன மற்றும் முறையே 36 கேள்விகள் உள்ளன
இது 0 முதல் 72 மாதங்கள் (1- 6 வயது வரை) வயது வரம்பை உள்ளடக்கியது.
இந்த சோதனை பட்டியல் ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறுகள், அறிவுசார் குறைபாடுகள், செவித்திறன் குறைபாடு மற்றும் மூளை முடக்குவாதம் ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்து வளர்ச்சி குறைபாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.
ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் மறு மதிப்பீடு செய்யப்படுகிறது.

## திருநெல்வேலி ஆரம்ப தலையீடு பராமரிப்பு கொடுப்பவர் மதிப்பீட்டு கருவி(Tirunelveli early intervention care giver assessment tool):

இந்த அளவு பெற்றோர் அடிப்படையிலான மதிப்பீட்டு கருவியாகும்.
இந்த அளவு 4 பிரிவுகளை உள்ளடக்கியது

பேமிலி எம்பொவெர்மென்ட் ஸ்கேல் (Family Empowerment Scale)

மாடிபைட் கேர் கிவெர் ஸ்ட்ரைன் இன்டெக்ஸ்(Modified caregiver Strain Index)

இன்டரெக்ஷன் வித் தி சைல்ட் Interaction with the child

ஏவாலுவேஷன் கொஸ்டின் (Evalution Questions)

**பயிற்சி:**

எந்தவொரு பயிற்சியின் முதல் மற்றும் முக்கிய படி ஒரு இலக்கை நிர்ணயிப்பதாகும்.

**இலக்கு நிர்ணயம்:**

பயிற்சி முறையின் இலக்குகளை நிர்ணயிப்பது மிக முக்கியமான பகுதியாகும். குழந்தைகள் ஒரு சிறந்த தொடர்பாளராக மாறுவதற்கும் அன்றாட நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் இலக்குகளில் கவனம் செலுத்த வேண்டும்.

**ஒரு நல்ல குறிக்கோள் பின்வருமாறு:**

குழந்தை என்ன திறமையுடன் செயல்படுகிறது.
குழந்தைக்கு ஏன் திறன் முக்கியமானது.
குறிப்பிட்ட செயல்பாடுகளைப் பயன்படுத்தி திறனை எவ்வாறு மேம்படுத்துவது.

பயிற்சி இலக்குகள் SMART முறையில் இருக்க வேண்டும்

**S-SPECIFIC ( குறிப்பிட்ட)( குறிப்பிட்ட செயல்பாடு என்ன?)**

M-MEASURABLE (அளவிடக்கூடியது )(முன்னேற்றத்தை எவ்வாறு அளவிடுவீர்கள்?

A- ACHIEVABLE (அடையக்கூடியது ) (செயல்பாடு அடையக்கூடியதா?).

R – REALISTIC (யதார்த்தமானது )( செயல்பாடு யதார்த்தமானதா?).

T- TIMELY (சரியான நேரத்தில் (செயல்பாடை முடிக்க எவ்வளவு நேரம் ஆகும்?).

## SMART இலக்கு எடுத்துக்காட்டுகள்:

2 மாத காலப்பகுதியில், குழந்தை பெற்றோரிடமிருந்தோ அல்லது ஆசிரியர்களிடமிருந்தோ ஏதாவது தொடர்பு கொள்ள ஒரு சைகையுடன் பார்வை தொடர்பைப் பயன்படுத்துகிறது, (80% துல்லியத்துடன்)

4 மாத காலப்பகுதியில், 80% துல்லியத்துடன் ஒரு வாய்மொழி குறிப்பை வழங்கும்போதும், குழந்தை தனது உடனடி சூழலில் உள்ள பொருட்களை விவரிக்கும் போதும் சொற்களை (விளக்கம் சொல் + பொருள், எ.கா. “நீல பந்து”) இணைத்து பயன்படுத்தும்.

6 மாதங்களில், குழந்தை சிறு கட்டளைகளை காட்சி குறிப்புடன் புரிந்துகொள்ளும் .(நிறுத்து, இங்கே வா, எனக்குக் கொடுங்கள்) (80% துல்லியத்துடன்).

# 7. பேச்சு மற்றும் மொழி மேம்பாட்டுக்கான உதவிக்குறிப்புகள் மற்றும் உத்திகள்:

குழந்தையின் சூழலில் உள்ள ஆர்வமுள்ள விஷயங்களை கற்பிக்கவும், பொருட்களின் பெயர்களை அறிமுகப்படுத்தவும், குழந்தையை புரிய/பேச வைக்கவும்.
குழந்தை குதித்தல் அல்லது பந்துடன் விளையாடுவது போன்ற எந்தவொரு செயலையும் செய்தால், அதன் மூலம் தகவல் பரிமாற்றத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். (எ.கா. குழந்தை குதித்தால், “நீ குதிக்கிறாய்” என்று சொல்லுங்கள்)
குழந்தையின் சைகைகளில் சொற்களைச் சேர்ப்பது (எ.கா. ஒரு குழந்தை ஒரு பசுவை சுட்டிக்காட்டினால், “அது மாடு” என்று சொல்லுங்கள்).

நீங்கள் அவருடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கும்போது குழந்தையை உங்களைப் பார்க்க வைக்கவும்..

- குழந்தையுடன் விளையாட்டுத்தனமாக நடந்து கொள்ளுங்கள்.
- உங்கள் முகபாவங்கள் குழந்தையின் ஆர்வத்தைத் தூண்டுகின்றன

- குழந்தை உங்கள் நாக்கு மற்றும் வாய் அசைவையும் பார்க்கும்.
- குழந்தையே ஒரு செயல்பாட்டைத் தேர்வுசெய்ய காத்திருந்து பின்னர் அந்த செயல்பாட்டுடன் செல்லுங்கள் (எ.கா. ஒரு குழந்தை உங்களிடம் ஒரு பந்தை உருட்டினால், அதை அவர்களிடம் திருப்பவும்)
- குழந்தையின் சொற்களஞ்சியத்தை உருவாக்க உதவுவதற்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை விவரிக்கவும், விளையாடும் போது செயல்களைப் பற்றி கருத்து தெரிவிக்கவும்.

## முறை வைத்து செயல்படுங்கள் :

பந்தை ஒருவர் பின் ஒருவராக பிடித்து எறிதல், பொருள்களுக்கு பெயரிடுவது, புதிர் பலகைகள் ( puzzle) போன்ற விளையாட்டுகளை விளையாடுங்கள், இது குழந்தையின் முறை வைத்து செயல் படும் எண்ணத்தை ஊக்குவிக்கிறது.

குழந்தையின் முறை இது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள உதவும் பதிலை எதிர்பார்க்கும்போது அதைப் பாருங்கள். பொறுமையாக இருங்கள் மற்றும் பதிலளிக்க குழந்தைக்கு நேரம் கொடுங்கள்.

## மாடலிங்:

மற்றவர்கள் பேசுவதைக் கேட்பதன் மூலம் ஒரு குழந்தை புதிய சத்தங்களையும் ,சொற்களையும் கற்றுக்கொள்கிறது

ஒரு குழந்தை ஒரு வார்த்தையை தவறாக சொன்னால், அந்த முயற்சியைப் புகழ்ந்து, பின்னர் வார்த்தையைச் சரியாகச் சொல்லுங்கள். குழந்தை இப்போதே வார்த்தையை சரியாகச் சொல்லும் என்று எதிர்பார்க்க வேண்டாம் (எ.கா. குழந்தை நாய்க்கு "காய்" என்று கூறுகிறது என்றால், "ஆம் அது ஒரு நாய்" என்ற பதிலை மாதிரியாகக் கொள்ளுங்கள்).

## கருத்து:

குழந்தை என்ன செய்கிறான், பார்க்கிறான் என்று கருத்துத் தெரிவிக்கவும்.

எடுத்துக்காட்டிற்கு "ஆஹா, என்ன வேகமான கார்!", "நான் ஒரு மாட்டை கண்டேன் அது "மா" என சத்தமிடும் , "அது ஒரு பெரிய கோயில்".

## இணைத்தல் +1

குழந்தை சொல்வதை மீண்டும் சொல்லுங்கள் மற்றும் சத்தம் அல்லது வார்த்தையைச் சேர்க்கவும் எடுத்துக்காட்டிற்கு குழந்தை _______ என்று சொன்னால், நாங்கள் ______:

- பா - பந்து
- நாய் - பெரிய நாய்
- பால் - பால் வேண்டும்
- எனக்கு கொடு - எனக்கு பந்து கொடு.

**நான்கு "S":**
குறைவாகச் சொல்லுங்கள்: குழந்தையுடன் பேசும்போது, சிறிய எளிய வாக்கியங்களைப் பயன்படுத்துங்கள்
அழுத்தம்: ஒரு வார்த்தை தனித்து தெரிய அதற்கு அழுத்தம் கொடுங்கள்
மெதுவாக: உங்கள் பேச்சின் தன்மையை மெதுவாக்குங்கள்
காட்டு: சுட்டிக்காட்டி, சைகைகள் அல்லது படங்கள் மூலம் கற்பிக்கவும்.

## மீண்டும் மீண்டும் மீண்டும் செய்யவும்:

ஒரு குழந்தை ஒரு வார்த்தையைக் கற்றுக்கொள்வதற்கு முன்பு பல முறை கேட்க வேண்டும்

வெவ்வேறு சூழல்களில் வார்த்தையை முயற்சி செய்து மீண்டும் செய்யவும். எடுத்துக்காட்டிற்கு "அது ஒரு பெரிய கோபுரம்", "இந்த காலணிகள் எனக்கு மிகப் பெரியவை", "நீங்கள் அதிகமான உணவை சாப்பிட்டீர்கள்".

## பேச்சு பயிற்சியாளரின் பங்கு :

1. வளர்ச்சி நிலைகளை சந்திக்காத குழந்தைகளை அடையாளம் காணவும். தகவல் பரிமாற்றம், வெளிப்படுத்தும் மொழி ,மொழி புரிதல் மற்றும் பேச்சு சத்தங்களை கற்று தருதல் .
2. குழந்தையின் பலம் மற்றும் பலவீனங்கள் குறித்து குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு கல்வி வழங்குதல்.
3. குறிப்பிட்ட உத்திகளைப் பயன்படுத்த குடும்பத்தினருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் கற்றுக் கொடுங்கள், மேலும் குழந்தை ஒரு சிறந்த தகவல் பறிமாற்றுபவராக மாற உதவும் குறிப்பிட்ட செயல்களைச் செய்யுங்கள்
4. உத்திகள் மற்றும் செயல்பாடுகளை தவறாமல் பயன்படுத்துவதன் மூலம் வகுப்பறையிலும் வீட்டிலும் குழந்தையின் கற்றல் திறனை ஆதரிக்கவும்..

# 8. கற்றலை ஆதரிப்பதற்கான உதவிக்குறிப்புகள் மற்றும் உத்திகள் :

## சுற்றுச்சூழலை சௌகரியமானதாக ஆக்குங்கள்:

- தினசரி அட்டவணை அல்லது வழக்கத்தை உருவாக்குங்கள், இதனால் குழந்தைக்கு என்ன எதிர்பார்க்க வேண்டும் என்று தெரியும்.
- குழந்தை வழக்கமான வழியைக் கற்றுக்கொள்ளவும் நினைவில் கொள்ளவும் காட்சி அட்டவணையைப் பயன்படுத்தவும்.

- என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பது பற்றிய தெளிவான விதிகளை வழங்கவும்.
- அந்த விதிகளை வலுப்படுத்தும் போது சீராக இருங்கள்.
- ஒரு செயல்பாடு எப்போது முடிவடையும் என்று குழந்தைக்கு தெரியப்படுத்துங்கள்.
  (எ.கா. "உங்களுக்கு இன்னும் 5 நிமிடங்கள் விளையாட அனுமதி உண்டு பின்னர் வகுப்பை தொடர வேண்டும்)

## சுற்றுச்சூழலில் செய்யும் மாற்றங்கள்:

- எந்தவிதமான கவனச்சிதறல்களையும் அகற்றவும்.
  எடுத்துக்காட்டிற்கு கவனச்சிதறல்களிலிருந்து குழந்தையை மாற்றுவது (எ.கா. வேடிக்கை பார்ப்பதை தவிர்ப்பது, பிற மாணவர்கள்).
- குழந்தையை ஆசிரியர், பெற்றோர் அல்லது பராமரிப்பாளருக்கு அருகில் உட்கார வைத்து கொள்ளுங்கள்
- ஒலி மற்றும் / அல்லது சத்தத்திற்கு குழந்தையின் உணர்திறன் (sensitivity) குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.
- செயல்பாட்டை ( activities) மாற்றவும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட முறை மற்றும் வெவ்வேறு வழிகளில் அறிவுறுத்தல்களைக் கொடுங்கள்.
- குழந்தைகளுக்கான செயல்பாடுகளை சுவாரஸ்யமாக்குங்கள்
- செயல்பாட்டை எப்போது நிறுத்த வேண்டும் என்பதை அறிந்து வேறு எதையாவது கொடுக்கலாம்.
- தேவைப்படும்போது குழந்தைக்கு ஓய்வு கொடுங்கள்
- தேவைப்படும் போது நகர்த்தவும் நீட்டவும். குழந்தைக்கு வாய்ப்பு கொடுக்கவும்.
- ஒரு செயலை முடிக்க குழந்தைக்கு அவகாசம் கொடுங்கள்.

## நேர்மறையான கற்றல் ( positive learning) வாய்ப்புகளை உருவாக்குங்கள்:

- அறிவுறுத்தல்கள் மற்றும் கேள்விகளை செயலாக்க குழந்தைக்கு நேரம் கொடுங்கள்.
- உங்களுக்கு எளிதாக்க நீங்களே மனதில் 5 எண்ணிவிட்டு அடுத்த செயலை கொடுக்கலாம்.
- வழிமுறைகளை மாற்றி எளிய மொழியைப் பயன்படுத்துங்கள்
- மெதுவாகவும் தெளிவாகவும் பேசுங்கள்.
- பாராட்டுகளில் கவனம் செலுத்துங்கள் மற்றும் குழந்தையின்
- வெற்றிகளைக் கொண்டாடுங்கள் (எ.கா. "அருமை! நீ மிக அருமையாக கவனிக்கின்றாய்)

குழந்தையுடன் நம்பிக்கையை வளர்த்து, பாதுகாப்பான சூழலை உருவாக்குங்கள்

ஒரு நல்ல முன்மாதிரியாக இருங்கள்.

நல்ல கேட்பவராக இருங்கள்.

## பயிற்சியாளர்களுக்கு சில பயிற்சி நுட்பங்கள்:

## பார்வை தொடர்பை மேம்படுத்த:



- வேடிக்கையான முகபாவனைகளைப் பயன்படுத்துங்கள்
  எ.கா. நாக்கை வெளியே நீட்டுவது, உங்கள் கன்னங்களை காற்றால் நிரப்புவது, பின்னர் குத்துவது போன்ற வேடிக்கையான விளையாட்டுக்களை உருவாக்குதல்.
- உங்கள் முகத்தில் குறிப்பாக கண் மேலே மற்றும் நெற்றியில் ஸ்டிக்கர்களைப் பயன்படுத்துங்கள்.
- டார்ச் விளையாட்டுகள் - சுவரை நோக்கி ஒளி உருவாக்கி பின்தொடரவும். அதை சுவாரஸ்யமாக்குவதற்கு வெவ்வேறு வண்ணங்களுடன் டார்ச்சை மூடுங்கள்.
- கண்ணை மூடி விளையாடுவது (pee k a boo), மறைந்து கொண்டு விளையாடுங்கள் (எ.கா. கதவுகள் மற்றும் திரைச்சீலைகள் பின்னால் மறை)
- வேடிக்கையான முகமூடிகள் மற்றும் கண்ணாடிகளைப் பயன்படுத்துங்கள்.



## கவனத்தை மேம்படுத்த:



குழந்தைக்கு பிடித்த செயலை தீர்மானிக்க அனுமதிக்கவும். அவர்களின் ஆர்வத்தின் அடிப்படையில் ஆக்கப்பூர்வமாக சிந்தித்து செயல்பாட்டை உருவாக்குங்கள். எ.கா: குழந்தை ஒரு பொம்மை மீது ஆர்வமாக இருந்தால், ஒரு விலங்கு பொம்மையை எடுத்துக் கொள்ளுங்கள், அது தொடர்பான ரைம்களைப் (Rhymes) பாடுங்கள் அல்லது விலங்கு போல ஒலிக்கவும். குழந்தையுடன் பொம்மையை நகர்த்தி அதை இயக்கச் செய்யுங்கள், கீழே விழ செய்து பின்பு மேலே எடுத்து வைத்தல்.



➡ புதிர் பலகை கொடுங்கள். புதிரில் உள்ள பொருட்களின் பெயர்களைக் கற்பித்து, தனி மற்றும் இணையான விளையாட்டில் ஈடுபடுங்கள்.

➡ போர்டில் ஸ்டிக்கர்களை ஒட்டவும், ஓவியம் வரைதல், பந்தைக் கடந்து (passing the ball) செல்வது, கைகளைத் தட்டுவது, அதிக ஹய் ஃபை செய்வது போன்ற விளையாட்டுகளை கொடுங்கள். புதிய பொம்மைகளை அறிமுகப்படுத்துங்கள் மற்றும் பொம்மையைப் பற்றி பேசுங்கள் வாய்மொழி மற்றும் தொட்டுணரக்கூடிய குறிப்புகளைப் பயன்படுத்துங்கள், குழந்தையை உங்களைப் பார்க்க வைத்து, நீங்கள் பயன்படுத்தும் பொருட்களை உணரச் செய்யுங்கள் . விரும்பத்தக்க ஒவ்வொரு செயலுக்கும் பாராட்டுங்கள்

# 9. பார்வை தொடர்பு சாதனங்கள்

➡ குழந்தைகளுக்கு ஒரு செய்தி அல்லது அறிவுறுத்தலைப் புரிந்துகொள்வதற்கும் ஒரு சிந்தனை அல்லது யோசனையை வெளிப்படுத்துவதற்கும் பார்வை தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த சாதனங்கள் எளிமையானவை, பின்பற்ற எளிதானது மற்றும் குழந்தையின் அன்றாட வழக்கத்திற்கு குறிப்பிட்டவை.

➡ ஒரு பார்வை தொடர்பு சாதனம் இறுதியில் குழந்தையின் விரக்தியையும் கவலையையும் குறைக்க உதவுகிறது மற்றும் குழந்தை அதிக நம்பிக்கையுடனும் சுயாதீனமான தகவல் பரிமாற்றுபவராகவும் மாற உதவும்.

## பார்வை தொடர்பு வளர்ப்பதற்கான உதவிக்குறிப்புகள்:




➡ அடிப்படை படங்கள் அல்லது சின்னங்களைப் பயன்படுத்துங்கள்.

➡ குழந்தை தேர்வு செய்வதற்கான தேர்வுகளை வழங்குதல்.
எ.கா. "உங்களுக்கு தண்ணீர் அல்லது பால் வேண்டுமா?"

➡ தினசரி வழக்கத்திற்கான கட்டமைப்பை வழங்க இதைப் பயன்படுத்தவும்.
எ.கா. காண்பிக்க வகுப்பறையின் சுவரில் படங்களுடன் ஒரு அட்டவணையை வைத்திருங்கள்

➡ சாதனங்கள் எவ்வாறு இயங்குகிறது மற்றும் அவர்கள் பின்பற்ற வேண்டிய விதிகளை குழந்தைகளுக்கு கற்பிக்கவும்

➡ சாதனங்களை சிறிய மற்றும் வெவ்வேறு சூழல்களில் பயன்படுத்த எளிதாக்குங்கள்.

➡ எ.கா. வீட்டிலும் பள்ளியிலும்

➡ சாதனங்களை தனிப்பயனாக்கவும், குழந்தை பயன்படுத்த ஊக்குவிக்கவும்.

# 10. செவித்திறன் குறைபாடு :

செவித்திறன் குறைபாடு என்பது செவிப்புலன் இழப்பு. செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு புரிந்துகொள்வதிலும் பேசுவதிலும் சிரமம் உள்ளது.
செவிப்புலன் இழப்புடன் தொடர்புடைய அறிகுறிகள் ,பாதிக்கப்பட்ட நபர்களின் நடத்தைகளும் அடங்கும்.



- தாமதமான பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி
- மற்றவர்கள் பேசுவதைக் கேட்க முடியவில்லை
- . மீண்டும் மீண்டும் கூற கேட்கிறார்கள்.
- பிழையான பேச்சால் தெளிவாக புரியவில்லை.
- உதடு அசைவு மற்றும் சைகைகளை கவனிக்கிறார்கள்.
- உரையாடலில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருப்பது
- நடவடிக்கைகளில் பங்கேற்காமல் தனியாக இருப்பது.
- குறைக்கப்பட்ட கல்வி செயல்திறன்.

## கேட்டல் சாதனங்கள் மற்றும் பேச்சு பயிற்சி:

காது கேட்கும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு செவிப்புலன் போன்ற உதவி கேட்கும் சாதனங்கள் வழங்கப்படுகின்றன.
செவிப்புலன் மூலம் குழந்தைக்கு அவர்களின் தேவைகளின் அடிப்படையில் பேச்சு சிகிச்சை அளிக்கப்படுகிறது
குழந்தைக்கு வழங்கப்பட வேண்டிய முக்கியமான பயிற்சி உச்சரிப்பு பயிற்சி.



## பேச்சு பயிற்சி:

பேச்சு மற்றும் மொழி கோளாறுகள் உள்ள குழந்தைக்கு பேச்சைப் புரிந்துகொள்வதிலும் உற்பத்தி செய்வதிலும் சிரமம் உள்ளது.
செயல்பாட்டு தொடர்பு திறன்களைப் பயன்படுத்த இந்த குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்..

# 11.செயல்பாட்டுதொடர்பு:

செயல்பாட்டு தொடர்பு என்பது தகவல் பரிமாற்ற திறன்களின் மிக அடிப்படையானது
இந்த வகையான தகவல் பரிமாற்றம் பேசும் ஒருவரின் அடிப்படை விருப்பங்களையும் தேவைகளையும் அறிந்து கொள்கிறது .அதாவது "எனக்கு அது வேண்டும்", "எனக்கு அடி பட்டது என்பதை" அல்லது "நான் குளியலறையைப் பயன்படுத்த வேண்டும்"..




### வேண்டிக்கொள்

"எனக்கு (விரும்பிய பொருள் / உணவு) கொடுங்கள்"
"எனக்கு உதவுங்கள்"

### கண்டனம் செய்:

"இனி இல்லை"
"இல்லை (குறிப்பிட்ட செயல் / உணவு / பொருள்)"

## பெயரிடுதல்

அவர் பார்க்கும் அல்லது விளையாடும் சூழலில் பொருட்கள், பொம்மைகள், உணவு ஆகியவற்றின் பெயர் கூறுங்கள்.

### செயல்களை பெயரிடுதல்

எளிய செயல்களை விவரிக்க 2-சொல் சொற்றொடர்களைப் பயன்படுத்துங்கள்.
எடுத்துக்காட்டாக: பந்து "_____" (,உள்ளே, மேலே, வெளியே, கீழே
"எடுத்துக்காட்டாக: "______ பந்து / கார்" (தள்ளு, உருட்டல்,) பௌண்ஸ்
இது பிற செயல்பாடுகளிலும் பயன்படுத்தப்படலாம் ("ஜானி சாப்பிடு")

மறுபடி நிகழ்தல் ( Recurrence )
"அதிகம் (பொம்மை / செயல் / உணவு)".

### முடித்து கொள்ளுதல் : (Disappearance)

எதையாவது எடுத்துச் செல்லும்போது அல்லது ஏதாவது விளையாடுவதையோ அல்லது சாப்பிடுவதையோ முடிக்கும்போது "அனைத்தும் முடிந்தது (குறிப்பிட்ட பொருள் / செயல்)" "அனைத்தும் போய்விட்டன (குறிப்பிட்ட பொருள்)" "பை பை (குறிப்பிட்ட பொருள் )".

## தன் முறை அறிதல்.(turn taking )


"எனது வாய்ப்பு" “உங்கள் முறை” “அம்மாவின் முறை” “ ஜானியின் முறை”.

# 12 . உமிழ்நீர் கட்டுப்பாட்டு பயிற்சிகள்: (Drooling Control Exercises)

மூளை முடக்கு வாதம் கொண்ட குழந்தைகளுக்கு இந்த பயிற்சி குறிப்பாக தேவைப்படுகிறது.

- கண்ணாடியின் முன் அமர்ந்து உதடுகளால் பல்வேறு வடிவங்களை
- உருவாக்குங்கள் (எடுத்துக்காட்டாக, புன்னகை, நீட்டு , உள்ளெ இழு).
- உதடுகளுக்கு இடையில் ஸ்பூன் அல்லது காகிதத் துண்டுகளை வைத்திருங்கள்.
- குழந்தையைய் “ப” “ம” போன்ற ஒலிகளை உருவாக்கச் செய்யுங்கள்
- தேன் போன்ற உணவுகளை மேல் உதட்டில் வைக்கவும், கீழ் உதட்டால் அகற்ற ஊக்குவிக்கவும்..
- உதடுகளை நாக்கால் தொட முயற்சி:
- முயற்சி செய்து, உங்கள் நாவின் நுனியால் மூக்கைத் தொடவும்.
- மிட்டாய், லாலிபாப் மற்றும் பலவற்றை சுவைத்து உண்ண ஊக்குவிக்கவும்.
- குழந்தையின் உமிழ்நீரை அடிக்கடி விழுங்க நினைவூட்டுங்கள்
- குழந்தையின் தலையை நேராக வைக்க நினைவூட்டுங்கள்.
- தனது உமிழ்நீரைத் தானாகவே துடைக்க குழந்தையை ஊக்குவிக்கவும்





# 13. உச்சரிப்பு பயிற்சி:
# ( Articulation Training:)

உச்சரிப்பு கோளாறுகள் உள்ள குழந்தைகளுக்கு SODA பிழைகள் உள்ளன.

**S- SUBSTITUTION** ஒரு சத்தத்திற்குபதில் வேறொன்று சொல்வது (எ.கா நாய் - பாய்.)


**O-OMMISSION** ஒன்று அல்லது ரெண்டு சத்தங்களை விட்டுவிடுவது (எ.கா வாழைப்பழம் – வாப்பம்) வா பழம் என்று கூறுவார்

**D-DISTORTION** தெளிவற்ற வார்த்தைகள் கூறுவது (தெளிவற்ற ஒலி உற்பத்தி)

**A-ADDITION** ஒன்று அல்லது ரெண்டு சத்தங்களை இணைத்து பேசுவது பதிலீடு (எ.கா மதம் - மாதம் )

- தனிமையில் எழுத்துக்களை உருவாக்க குழந்தை ஊக்குவிக்கப்படுகிறது,(ப, ம, தா போன்றவை)
- சொற்களின் ஆரம்ப, இடைநிலை மற்றும் இறுதி நிலையில் எழுத்துக்களைப் பயன்படுத்த குழந்தைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.
- ஒலி - ப (ஆரம்ப - பேனா; இடைநிலை-தப்பு; இறுதி- காப்பு)
- இந்த சொற்களை சொற்றொடர்களிலும் வாக்கியத்திலும் பயன்படுத்த குழந்தைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.







**எ.கா. பெயிண்ட் (ஆரம்ப), பப்பி (இடைநிலை) கப்(இறுதி).**

# 14. சுருக்கம்

ஒரு குழந்தையின் கல்வி வீட்டிலேயே தொடங்குகிறது. பெற்றோர்கள் முதல் ஆசிரியர்கள்வரை வெளிப்படுத்தும் மற்றும் புரிதல் மொழி, பேச்சு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். குழந்தைகள் பொதுவாக இந்த திறன்களை சுற்றியுள்ளவர்களுடன் பார்ப்பது, கேட்பது மற்றும் தொடர்புகொள்வதன் மூலம் கற்றுக்கொள்கிறார்கள். எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி நிலைகள் ஏற்ப தகவல் பரிமாற்ற திறன்களை வளர்த்துக் கொள்ளாத குழந்தைகளுக்கு,கூடுதல் ஆதரவை வழங்குவது முக்கியம். புத்தகங்களைப் படிப்பது, படங்களைப் பார்ப்பது, ஒன்றாக விளையாடுவது மற்றும் பாடல்களைப் பாடுவது ஆகியவை குழந்தையின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சியை ஆதரிக்க உதவும் சில வழிகள். நினைவில் கொள்ளுங்கள், தகவல் பரிமாற்றம் என்பது பேசுவது மட்டுமல்ல. குழந்தைகள் பல்வேறு வழிகளில் தொடர்பு கொள்ளலாம் (எ.கா. முக பாவங்கள், சொற்கள், படங்கள் மற்றும் சைகைகளைப் பயன்படுத்துதல்) எனவே பேச்சு பயிற்சியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் குழந்தைகளுடன் வெவ்வேறு வழிகளில் தொடர்புகொள்வதற்கு கற்று தருதல் வேண்டும். குழந்தை எவ்வாறு தொடர்பு கொள்கிறது மற்றும் குழந்தை ஏன் தொடர்பு கொள்கிறது என்பதைப் புரிந்துகொள்வது அவர்களின் பேச்சு, மொழி. மற்றும் தகவல் பரிமாற்ற மேம்பாடு. வெவ்வேறு உத்திகளை முயற்சிக்கவும், நடைமுறையில் ஒத்துப்போகவும், பொறுமையாக இருங்கள். பாசிட்டிவ் எண்ணங்களை வைத்து கொள்ளுங்கள்.


Reference

Bowen, C. (n.d.). Receptive Language. Retrieved from https://www.speech-language-therapy.com/index.php?option=com_content&view=article&id=34:ages&catid=11:admin&Itemid=117.

Mother Giving Food to Her Son Free Icon. (n.d.). Retrieved from https://www.onlinewebfonts.com/icon/57804

Quick Speech and Language Screener. (n.d.). Retrieved from http://healthygc.com.au/MedicareLocal/media/Site-Pages-Content/Nurse/Quick-Speech-a nd-Language-Screener.pdf.

Speech Language Definitions . (n.d.). Retrieved from https://www.pediatrictherapynetwork.org/services/speech_language_definitions.cfm.

Tips for Parents. (n.d.). Retrieved from http://www.hanen.org/Helpful-Info/Parent-Tips.aspx.

World Voice Day. (n.d.) Retrieved from http://www.world-voice-day.org

Anatomy and Physiology Online. (n.d.) Retrieved from https://anatomyutm.wordpress.com

Enabling Inclusion through
Early Intervention (EI) Programme

https://earlyintervention.amarseva.org/

Amar Seva Sangam

Sulochana Gardens,
Post Box No. 001
10/2/163,Tenkasi Road, Ayikudy,
Tenkasi Dt.,Tamil Nadu, India. Pin 627852

Copyright © Amar Seva Sangam